MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்
சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
MENMATHI KOVAI TAMIL MANDRAM
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# புதுக்கோட்டை மாவட்ட மீனவர்களின் தொழில் முறைகள் ஓர் ஆய்வு

**ஆ.பிரபாகரன்**
முனைவர் பட்ட ஆய்வாளர் பதிவு எண்:B1/TAM23PDEC0362/2023
தமிழ்த்துறை. நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி.(தன்னாட்சி)
பாரதியார் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது.
கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா

**முனைவர் ப. விக்னேஸ்வரி**
இணைப் பேராசிரியர் தமிழ்த்துறை.
நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி.(தன்னாட்சி)
பாரதியார் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது.
கோயம்புத்தூர்,தமிழ்நாடு,இந்தியா

# A study of the occupational patterns of fishermen in Pudukkottai district

A. Prabakaran
Ph.D. Research Scholar RegistrationNumber: B1/TAM23PDEC0362/2023
Department of Tamil, Nehru Arts and Science College. (Autonomous),
Affiliated to Bharathiar University, Coimbatore, Tamil Nadu, India.
Gmail: nitprabakaran.a@nehrucolleges.com. Phone:9159706380
ORCID: https://orcid.org/0009-0009-3989-1529

JULY – AUGUST

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

Dr. P. Vigneshwari Associate Professor,
Department of Tamil Nehru Arts and Science College (Autonomous),
Affiliated to Bharathiar University,
Coimbatore, Tamil Nadu, India.
Gmail: nascvigneswari.p.@nehrucolleges.com
ORCID: https://orcid.org/0000-0001-5023-1091

**Abstract**

This study emphasizes the role of the ancient fishing industry and its social impact on the economy, which is a crucial and unavoidable component of human life. The primary objective of this research is to explore the traditional fishing methods and the resulting economic dynamics of the fishing community in Pudukkottai District, which serves as the study area (spanning approximately 42.8 km of coastline along the eastern coast of Tamil Nadu) and encompasses 32 fishing villages. The research centers on measuring the impact of mechanization on fishing vessels and gear that has occurred over the last few decades. Specifically, the main task is to compare the socio-economic status of modern fishermen using mechanized boats and trawling nets with that of traditional fishermen utilizing country boats and deep-sea nets. The study explains the antiquity of the fishing profession through Sangam literature and the usage of names like 'Parathavar' and 'Valaiñar'. Furthermore, the reasons for the involvement of multiple social communities in the fishing industry here are discussed. Economic Disparity**:** Although mechanized boat fishermen incur higher investment and fuel expenses, their net profit is significantly greater than that of traditional fishermen. Conversely, traditional fishermen maintain a stable profit margin with lower investment and carry a reduced debt burden. Technological Impact: Traditional methods only target specific fish species in shallow waters, resulting in lower by-catch. However, modern trawling nets pose a threat to marine biodiversity. Government Schemes**:** The study examines the impact of government schemes, such as fuel subsidies, fishing ban relief, savings schemes, and welfare board assistance, on the livelihoods of fishermen, and highlights the challenges traditional fishermen face in accessing these benefits.This research is expected to guide policy decisions for the socio-economic development of the fishermen in Pudukkottai District.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

**திறவுச் சொற்கள் (Keywords):**

புதுக்கோட்டைமாவட்டம், மீன்பிடித்தொழில், சமூகபொருளாதாரநிலை, இயந்திரமயமாக்கல், பாரம்பரியமீன்பிடிப்பு ,இழுவலைகள் ,வாழ்வாதாரம் அரசுத்திட்டங்கள் ,சங்கஇலக்கியம், பொருளாதார வேறுபாடு

**ஆய்வுச் சுருக்கம்:**

மனித வாழ்வியலின் மிக முக்கியமான அங்கமான பொருளாதாரத்தில், தொன்மையான மீன்பிடித் தொழிலின் பங்கு மற்றும் அதன் சமூகத் தாக்கம் ஆகியவற்றை இந்த ஆய்வு வலியுறுத்துகிறது. தமிழ்நாட்டின் கிழக்குக் கடற்கரையோரத்தில் உள்ள புதுக்கோட்டை மாவட்டத்தின் (சுமார் 42.8 கி.மீ நீளம்) 32 மீனவ கிராமங்களை ஆய்வுக் களமாகக் கொண்டு, அங்குள்ள மீனவ சமூகத்தின் வாழ்வாதாரமான மீன்பிடித் தொழில் முறைகளையும், அதன் தொடர்பாக எழும் பொருளாதார அசைவுகளையும் வெளிப்படுத்துவதே இந்த ஆய்வின் முதன்மை நோக்கம் ஆகும்.கடந்த சில தசாப்தங்களாக மீன்பிடிக் கலன்கள் மற்றும் கருவிகளில் ஏற்பட்டுள்ள இயந்திரமயமாக்கலின் (Mechanization) தாக்கத்தை அளவிடுவது ஆய்வின் மையமாகும். குறிப்பாக, இயந்திரப் படகுகள் மற்றும் இழுவலைகளைப் பயன்படுத்தும் நவீன மீனவர்களின் சமூக-பொருளாதார நிலையை, பாரம்பரிய நாட்டுப் படகு மற்றும் ஆழ்கடல் வலை பயன்படுத்தும் மீனவர்களின் நிலையுடன் ஒப்பிட்டு ஆராய்வது இதன் பிரதான பணியாகும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

சங்க இலக்கியப் பாடல்கள் வழி மீன்பிடித் தொழிலின் தொன்மை மற்றும் 'பரதவர்', 'வலைஞர்' போன்ற பெயர்களின் பயன்பாடு ஆகியவை ஆய்வில் விளக்கப்படுகின்றன. மேலும், இங்கு மீன்பிடித் தொழிலில் பல சமூகத்தினர் ஈடுபடுவதற்கான காரணங்களும் விவாதிக்கப்படுகின்றன. **பொருளாதார வேறுபாடு:** இயந்திரப் படகு மீனவர்கள் அதிக முதலீடு மற்றும் எரிபொருள்

செலவினம் செய்தாலும், அவர்களின் நிகர லாபம் பாரம்பரிய மீனவர்களை விடக் கணிசமாக அதிகமாக உள்ளது. அதேசமயம், பாரம்பரிய மீனவர்கள் குறைந்த முதலீட்டில் நிலையான லாப வரம்பையும், குறைந்த கடன் சுமையையும் கொண்டுள்ளனர். **தொழில்நுட்பப் பயன்பாடு:** மரபு சார்ந்த முறைகள் ஆழம் குறைந்த பகுதிகளில் இலக்கு மீன் வகைகளை மட்டுமே பிடிப்பதால், துணை மீன் பிடிப்பு (By-catch) குறைவாக உள்ளது. ஆனால் நவீன இழுவலைகள் கடல் பல்லுயிரினங்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன. **அரசுத் திட்டங்கள்:** அரசு வழங்கும் எரிபொருள் மானியம், மீன்பிடித் தடைக்கால நிவாரணம், சேமிப்புத் திட்டங்கள் மற்றும் நலவாரிய உதவிகள் போன்றவை மீனவர்களின் வாழ்வாதாரத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களையும், இந்த நலத்திட்டங்கள் பாரம்பரிய மீனவர்களைச் சென்றடைவதில் உள்ள சவால்களையும் இந்த ஆய்வு விவரிக்கிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

இந்த ஆய்வு புதுக்கோட்டை மாவட்ட மீனவர்களின் சமூக-பொருளாதார மேம்பாட்டிற்கான கொள்கை முடிவுகளுக்கு வழிகோலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**முன்னுரை:**

மனித வாழ்வியலில் பொருளாதாரம் என்பது மிக முக்கியமான, தவிர்க்க முடியாத ஓர் அங்கமாகும். சமூகத்தில் பொருட்செல்வம் இல்லை என்றால் தனிமனித வாழ்வியலும் இல்லை என்ற அளவில் அதன் தாக்கம் இன்றும் ஆழமாக வேரூன்றி நிற்கிறது. உலகம் தோன்றிய நாள் முதல் வேளாண்மையே முதல் பொருளாதாரமாகவும், அதன்பின் பல்வேறு தொழில் முறைகள் அடுத்த பொருளாதாரமாகவும் கருதப்பட்டன. இந்தத் தொழில் முறைகள் பலவற்றுள் மீன்பிடித் தொழிலும் ஒன்றாகும்.

மூவேந்தர் காலத்தில், பிறர் நிலத்தைக் கைப்பற்ற எண்ணியவர்கள் பெரும்பாலும் மருத நிலத்தையும் நெய்தல் நிலத்தையுமே கைப்பற்றியதற்குக் காரணம், இந்த இரு நிலங்களிலும் பொருளாதார வளம் மிகுந்திருப்பதுதான். அந்த வகையில், புதுக்கோட்டை மாவட்ட மீனவர்களின் மரபுத் தொழிலான மீன்பிடித் தொழில் முறைகளையும், அதன் தொடர்பாக எழும் பொருளாதார அசைவுகளையும் வெளிப்படுத்துவதே இந்த ஆய்வின் நோக்கமாகும். புதுக்கோட்டை மாவட்டம் தமிழ்நாட்டின் கிழக்குக் கடற்கரையில், சுமார் 42.8 கி.மீ நீளமுள்ள கரையோரத்தைக் கொண்டுள்ளது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

இங்குள்ள மீனவச் சமூகத்தின் வாழ்வாதாரம் பாக் விரிகுடாவையும் அதை ஒட்டிய கடல் பகுதிகளையும் சார்ந்துள்ளது.

கடந்த சில தசாப்தங்களாக, மரபு சார்ந்த மீன்பிடி முறைகளிலிருந்து மீன்பிடிக் கலன்கள் மற்றும் கருவிகளின் இயந்திரமயமாக்கல் (Mechanization) ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் தொழில்நுட்ப மாற்றம், புதுக்கோட்டை மீனவர்களின் பொருளாதாரத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை அளவிடுவதும், குறிப்பாக இயந்திரப் படகுகள் மற்றும் இழுவலைகளின் பயன்பாடு அதிகரித்துள்ள நிலையில், பாரம்பரிய நாட்டுப் படகு மற்றும் ஆழ்கடல் வலை பயன்படுத்தும் மீனவர்களின் சமூக-பொருளாதார நிலை எவ்வாறு வேறுபடுகிறது என்பதை ஆராய்வதுமே ஆய்வின் முக்கிய நோக்கம் ஆகும்.

**மீனவர்கள் ;**

மீன்பிடி தொழில் செய்கின்ற அனைவரும் மீனவர்கள் என பொதுவாக அழைக்கப்படுகின்றனர். ஆனால் சங்க காலத்தில் சேர்ப்பன் மெல்லப் புலம்பன் துறைவன் வலைஞன் என இவர்கள் அழைக்கப்பட்டனர் பாரதவர் என்று சொல்லும் இலக்கியங்களில் பறந்து பயின்று வந்து இருக்கிறது ஆனால் இன்று மீனவர்களின் ஜாதி சான்றிதழில் பரதவர் அல்லது பரவர் என்று சொல் இடம் பெறவில்லை இதனால் சங்ககாலத்திற்கு பிறகு இச்சொல் வழக்கிழந்து போயிற்று என கருதப்படுகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

ஆனால் இன்று மீன்பிடி தொழில் செய்பவர்கள் குறிப்பிட்ட ஒரு சமூகத்தைச் சார்ந்தவராக இல்லாமல் பல சாதியினரும் மீன்பிடித் தொழிலை செய்து வருகின்றனர் இதற்கு மீன்பிடிப்பதே கவுரவமாக எண்ணுகிறார்களா என்பதும் புரியவில்லை ஏனெனில் மீன்பிடித் தொழிலில் மிகு பொருளாதாரமும் உபரி பொருளாதாரமும் இருப்பதாக தெரியவில்லை ஒருவேளை வேளாண் தொழில் அல்லது வேறு தொழில் அப்பகுதியில் இல்லாததால் பொழுதை கழிப்பதற்கும் மனமகிழ்விற்கும் மீன்பிடித் தொழிலை கை கொண்டார்களா என்பது தெரியவில்லை அதே நேரத்தில் இன்று முழுநேர தொழிலாகவே மீன்பிடித் தொழிலை சிலர் செய்து வருவதையும் ஆய்வுக் களத்தில் காணமுடிகிறது.

**இலக்கியங்களில் மீன்பிடித்தொழில் ;**

சங்க இலக்கியம் தொடங்கி தற்கால இலக்கியம் வரை மீனவர்கள் பற்றியும் மீன்பிடி தொழிலை பற்றியும் பதிவு செய்யாத ஆசிரியர்கள் இல்லை அந்த அளவிற்கு மீனவர்களும் மீன்பிடித் தொழிலும் தவிர்க்க இயலாத ஒன்றாக சமூகத்தில் இருந்து வருவதை காணமுடிகிறது சங்க இலக்கியத்தில் நெய்தல் திணை பாடல் முழுவதும் கடற்கரையில் இருக்கின்ற தாவரங்கள் செடிகள் கொடிகள் மரங்கள் போன்றவற்றை எடுத்துக்காட்டுகின்றனர் இதை பி.எல். சாமி சங்க இலக்கியத்தில் செடி கொடிகள் என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டு இருக்கிறார். ஆகநானுற்றுப் பாடலொன்று கடலுக்குள் சென்று மீன் புடிப்போனைத் **திமிலோன்** என்று காட்டுகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

திமில் என்றால் **மீன்படகு** என்பதாகும் திண்டில் வன்பரதவர் (புறம்.24) என்று புறநானூற்றுப் பாடலொன்றும் சுட்டுகிறது.

**"ஓங்குதிரைப் பரப்பின் வாங்குவிசைக் கொளீஇ**
**திமிலோன் தந்த கடுங்கண் வயமீன்**
**தழைஅணி அல்குல் செல்வத் தங்கையர்**
**விழவுஅயர் மறுகின் விலைஎனப் பகரும்**
**கானல் அம் சிறுகுடி…(அகம்.320-1-5)**

கடலின் அழகினையும், கடலில் மீன்பிடிக்கின்ற மீளவர்களையும். மீளவர்கள் பிடித்து வரும் மீன்களையும், அம்மீன்களை விற்று வரும் பரதவப் பெண்களையும், மீவை சிற்றூர்களையும் சிறப்பித்துக் கூறுகிறது இப்பாடல்.

**"பெருங்கடற் பரப்பில் சேயிறா நடுங்க**
**கொடுந்தொழில் முகந்த செங்கோல் அவ்வலை**
**நெடுந்திமில் தொழிலோடு வைகிய தந்தைக்கு**
**உப்பு நொடை நெல்லின் மூரல் வெண்சோறு**
**அயிலை துழந்த அம்புளிச் சொரிந்து**
**கொழுமீன் தடிபட்டு குறுமகள் கொடுக்கும்**
**திணதேர்ப் பொறையன் தொண்டி" (அகம்.60-1-7)**

கடலில் பிடிபட்ட இறால் மீன்களைப் பிடித்து வரும் தந்தைக்கு, மகள் உப்பு விற்ற பணத்தில் வாங்கிய அயிலை மீன் குழம்பையும், கொழுமீன், கருவாட்டையும் உணவாக அளிக்கும் வளம்பொருந்திய இடம் என்று மற்றொரு பாடல் சிறப்பித்துக் கூறுகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

மீன்பீடிப்பவர்களை இலக்கியம் குறிப்பிடுகிறது. 'வலைஞன்' என்ற சொல்லாலும்சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது.

**"கதிர்முக்கு ஆரல் கீழ்ச் சேற்று ஒளிப்ப**
**கணைக்கோட்டு வாளை மீநீர்ப் பிறழ**
**எரிப்பூம் பழணம் நெரித்து உடன் வலைஞர்"**
**(புறம்.249:1-3)**

பூக்கள் நிரம்பிய சோலைகளைப் போல கடலின் நீர்வளம் காணப்படுவதால், அங்கு பிடிபடும் வாலை மீன்கள், கினையின் முகம் போல விளங்கும் யாமை மீன்கள், பனையின் குருத்தைப் போல கூர் முற்றிய வரால் மீன்கள், வேல் போன்று ஒளி பொருந்திய கயல் மீன்கள் போன்றவைகளைப் பிடித்து வரும் வளம் பொருந்திய இடத்தில் வசிக்கும் வலைஞர் என்று மீனவனை சிறப்பித்துக் கூறுகிறது பிறிதொரு பாடல் பத்துப்பாட்டில் உள்ள பெரும்பாணாற்றுப்படையில் குளத்திலுள்ள மீன்களைப் பிடிப்போரை வலைஞர் என்று சுட்டுகிறது. ஒரு முதுவேனில் காலத்துப் பகல் பொழுதில் வறுமையில் வாடிய பெரும்பாணன் ஒருவன் கையில் யாழொடு தம் வறுமை நீங்கப் பொருள்தேடி அலைகிறான். தொண்டைமான் இளந்திரையனிடம் பொருள் பெற்றுத் திரும்பும் ஒரு பாணன் வழியில் எதிரே வருகிறான். வறுமையில் வாடும் பாணனை வறுமை நீங்க இளந்திரையனிடம் செல்லுமாறு ஆற்றப்படுத்தும் அந்தப் பாணன் அவன் செல்ல வேண்டிய வழியை மிக விரிவாக விவரித்துக் கூறுகிறான்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

பாணன் சுட்டிக் காட்டும் வழியில் நெய்தல்நிலக் குறிப்பும், மீனவர் குடியிருப்பும் ஓரிடத்தில் சுட்டப்படுகிறது. அப்பாடலடிகள்,

**"செவ்வரிக் கயலொடு பச்சிறாப் பிறழும்**
**மையிருங் குட்டத்து மகவொடு வழங்கிக்**
**கோடை நீடினும் குறைபடல் அறியாத்**
**தோள்தாழ் குளத்த கோடு காத்திருக்குங்**
**கொடுமுடி வலைஞர்...(பெகும். 270-274)**

கழல் மீனும், இறால் மீனும் அதிகமாகக் கிடைக்கும் இடத்தில் வசிக்கும் மீனவ ஊருக்குச் சென்று வந்தால் நல்ல விருந்துண்டு வரலாம் என்கிறது இப்பாடல்.மதுரைக் காஞ்சியிலும் ஓரிடத்தில் குளத்தில் உள்ள மீன்களைப் பிடித்து விற்கும் தொழில் செய்யும் வலைஞர் பற்றிய குறிப்பு வருகிறது.

**"கம்புள் சேவல் இன் துயில் இரிய**
**வள்ளை நீக்கி வயமீன் முகந்து**
**கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்"5**
**(மதுரைக். 254-256)**

மீனவர்கள் வலையை இழுக்கும் சிறப்பை நச்சினார்க்கினியர் வலைஞர் என்று சிறப்பித்துக் கூறுகிறார். பரதவர்களை மீனவர், வணிகர், மன்னர் என்று மூன்று வகையாகப் பகுத்துக் கூறுகின்றார் கவிஞர் மீனவன்.

1. **"திண் திமில் வன் பரதவர்"** (புறம்.24)

உறுதிமிக்க படகையாளும் வலிமைமிக்க பரதவர்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

2. **"புன்தலை இரும்பரதவர்"** (பப்பாலை .90)

(உப்புநீர் படுவதால் பழுப்பேறிய தலைமுடியைக் கொண்ட வலிமைமிக்க பரதவர்)

3. **"கானலம் சிறுகுடிக் கடல்மேற் பரதவர்"** (நற்.4)

(கடற்கரைச் சோலையில் அமைந்த சிறுகுடி என்னும் குடியிருப்பில் இருந்து கடல்மேல் செல்லும் பரதவர்)

4. **"கொடுத்திமில் பரதவர்"** (குறுந்.304)

(வளைந்த படகில் செல்லும் பரதவர்)

5. **"நாள்வலை முகந்த கோள்வில் பரதவர்"** (அக.300)

(இளங்காலைப்பொழுதில் புதிதாகப் பின்னிய வலையில் பாடு அறிந்து மீன்களைப் பிடிக்கும் பரதவர்) முதலிய தொடர்கள் மீன்பிடிக்கும் பரதவ இனத்தை உணர்த்துவதாகும்.

**ஆய்வுக் களம்;**

புதுக்கோட்டை மாவட்டத்தில் 12 வட்டாரங்கள் உள்ளன. அதில் மீனவர்கள் வாழும் வட்டாரமாக ஆவுடையார்கோவில், மணமேல்குடி ஆகிய இரண்டு வட்டாரங்கள் உள்ளன. இவ்வட்டாரத்தில் ஏறத்தாழ 32 மீனவ கிராமங்கள் உள்ளன., கிராமங்களில் கடையர், மரைக்காயர், வன்னியர், படையாட்சியர், வலையர், கரையர், ஆதிதிராவிடர், நாடார், தேவர், மீனவசெட்டியார், அம்பலக்காரர் ஆகிய இனமக்கள் வாழ்கின்றனர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

| வ.எண். | கிராமத்தின் பெயர் | மொத்தக் குடும்பங்கள் | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | கட்டுமாவடி | 192 | 469 | 429 | 898 |
| 2 | அழகன்வயல் | 79 | 170 | 156 | 326 |
| 3 | பிராத்திபிராமன்பட்டினம் | 197 | 487 | 517 | 1004 |
| 4 | கிருஷ்ணாஜிணப்பட்டினம் | 307 | 804 | 792 | 1596 |
| 5 | திருமங்கலப்பட்டினம் | 11 | 35 | 27 | 62 |
| 6 | சீத்தாராமன்பட்டினம் | 111 | 237 | 235 | 472 |
| 7 | மேலஸ்தானம் | 83 | 171 | 168 | 339 |
| 8 | மும்பலை | 48 | 147 | 129 | 276 |
| 9 | பட்டான்காடு | 70 | 166 | 177 | 343 |
| 10 | வடாக்குமனமேல்குடி | 65 | 150 | 156 | 306 |
| 11 | வடாக்குஅம்மாபட்டிணம் | 322 | 696 | 669 | 1365 |
| 12 | கீழக்குடியிருப்பு | 246 | 568 | 511 | 1079 |
| 13 | பொன்னகரம் | 341 | 714 | 675 | 1389 |
| 14 | அந்தோணியார்புரம் | 175 | 409 | 438 | 847 |
| 15 | துளசியாபட்டிணம் | 5 | 13 | 17 | 30 |
| 16 | அம்மாபட்டிணம் | 101 | 274 | 214 | 488 |
| 17 | ஆதிப்பட்டிணம் | 59 | 161 | 129 | 290 |
| 18 | புதுக்குடி | 506 | 1107 | 1000 | 2107 |
| 19 | கோட்டைப்பட்டிணம் | 1196 | 2846 | 2768 | 5614 |
| 20 | ஜெகதாப்பட்டிணம் | 171 | 455 | 350 | 805 |

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21 | செல்லானேந்தல் | 516 | 1338 | 1233 | 2571 |
| 22 | அய்யம்பட்டிணம் | 73 | 201 | 170 | 371 |
| 23 | ஏம்பவயல் | 180 | 408 | 381 | 789 |
| 24 | முத்தனேந்தல் | 19 | 49 | 44 | 93 |
| 25 | பாலக்குடி | 134 | 328 | 262 | 590 |
| 26 | குமாரப்பன்வயல் | 147 | 343 | 311 | 654 |
| 27 | கோபாலப்பட்டிணம் | 329 | 777 | 711 | 1488 |
| 28 | மிமிசல் | 36 | 76 | 72 | 148 |
| 29 | R புதுப்பட்டிணம் | 416 | 990 | 897 | 1887 |
| 30 | அரசானகரிப்பட்டிணம் | 99 | 237 | 250 | 487 |
| 31 | முத்துகுடா | 403 | 928 | 892 | 1820 |
| 32 | ஏனாதி | 93 | 218 | 231 | 449 |
| மொத்தம் | | 6730 | 15792 | 15011 | 30803 |

**தொழில்நுட்ப பாரம்பரிய முறைகள்:**

பெரும்பாலும் ஆழம் குறைந்த பகுதிகளில் (சராசரியாக 5 கி.மீ வரை) செயல்படுகின்றன. இலக்கு மீன் வகைகளை மட்டுமே பிடிப்பதால், துணை மீன் பிடிப்பு (By-catch) குறைவாக உள்ளது. நவீன முறைகள்: இழுவலைகள் மூலம் அதிக ஆழமான பகுதிகளுக்கும் (20 கி.மீ-க்கு மேல்) மீன் பிடிக்கச் செல்கின்றன. அதிக மீன்களைப் பிடித்தாலும், சட்டவிரோத இழுவலைப் பயன்பாடு சிறிய வகை மீன்கள் மற்றும் கடல் பல்லுயிரினங்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

**பொருளாதார வேறுபாடுகள்:**

இயந்திரப் படகுகளை வைத்திருக்கும் மீனவர்கள், படகு மற்றும் எரிபொருளுக்காக அதிக முதலீடு மற்றும் செலவினம் செய்தாலும், அவர்களின் நிகர லாபம் பாரம்பரிய மீனவர்களை விடக் கணிசமாக அதிகமாக உள்ளது.பாரம்பரிய மீனவர்கள் குறைந்த முதலீட்டில், தினசரி குறைந்த அளவில் மீன்பிடித்தாலும், அவர்களின் லாப வரம்பு (Profit Margin) நிலையானதாகவும், கடன் சுமை குறைவாகவும் உள்ளது.

**அரசு திட்டங்கள்:**

எரிபொருள் மானியம் மற்றும் மீன்பிடித் தடைக்கால நிவாரணம் போன்றவை இயந்திரப் படகு மீனவர்களுக்கு அதிகப் பொருளாதாரப் பலனைத் தருகின்றன. இருப்பினும், நவீன உபகரணங்கள் வாங்குவதற்கான மானியங்கள் பாரம்பரிய மீனவர்களைச் சென்றடைவதில் சவால்கள் உள்ளன. புதுக்கோட்டை மாவட்ட மீனவர்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்காக, தமிழ்நாடு அரசு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மற்றும் மத்திய அரசு இணைந்து பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.புதுக்கோட்டை மாவட்டம் ஒரு கடலோர மாவட்டம் என்பதால், தமிழ்நாடு முழுவதும் மீனவர்களுக்கு வழங்கப்படும் பொதுவான நலத்திட்டங்களுடன்,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

உள்கட்டமைப்புக்கான சிறப்புத் திட்டங்களும் இங்குச் செயல்படுத்தப்படுகின்றன. புதுக்கோட்டை மாவட்ட மீனவர்களுக்கான முக்கிய அரசுத் திட்டங்கள்

**பொருளாதார நிவாரணம் மற்றும் சேமிப்புத் திட்டங்கள் ;**

| திட்டம் | விவரம் | பயனாளிகள் |
|---|---|---|
| மீன்பிடித் தடைக்கால நிவாரணம் | மீன்பிடி தடைக்காலத்தின்போது (ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரை 61 நாட்கள்), வாழ்வாதாரம் பாதிக்கப்படும் மீனவக் குடும்பங்களுக்கு 8,000 நிவாரணமாக வழங்கப்படுகிறது. | விசைப்படகு மற்றும் இழுவலைப் படகுகளில் பணிபுரியும் மீனவர்கள் மற்றும் குடும்பங்கள். |
| சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் | கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்: மீனவர் மாதந்தோறும் சேமிக்கும் தொகைக்கு (எ.கா. 1,500) ஈடாக, அரசு தனது பங்களிப்பைச் சேர்த்து, மீன்பிடி குறைவுக் காலங்களில் மொத்தமாக 4,500 நிவாரணமாக வழங்குகிறது. | கடல் மீனவர்கள் மற்றும் மீனவ மகளிர். |

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

| திட்டம் | விவரம் | பயனாளிகள் |
|---|---|---|
| மீன்பிடி குறைவுக் கால நிவாரணம் | மீன்பிடித் தடைக்காலம் அல்லாத இதர குறைவுக் காலங்களில், மீனவக் குடும்பங்களுக்கு 6,000 நிவாரணமாக வழங்கப்படுகிறது. | மீன்பிடித் தொழிலை முழுமையாகச் சார்ந்திருக்கும் குடும்பங்கள். |
| இலங்கை கடற்படையால் பாதிக்கப்படுவோர் நிவாரணம் | இலங்கை கடற்படையால் சிறை பிடிக்கப்படும் மீனவர்களின் குடும்பங்களுக்கு, அவர்கள் விடுவிக்கப்படும் வரை தினசரி உதவித் தொகை வழங்கப்படுகிறது. | இலங்கைச் சிறையில் வாடும் மீனவரின் குடும்பங்கள். |

**நலவாரிய உதவிகள் மற்றும் காப்பீட்டுத் திட்டங்கள் ;**

புதுக்கோட்டை மாவட்ட மீனவர்கள் தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தில் உறுப்பினராகச் சேர்ந்து பின்வரும் உதவிகளைப் பெறலாம்:

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

| உதவி வகை | உதவித் தொகை (ரூபாய்) |
|---|---|
| விபத்தினால் மரணம் / மீன்பிடிக்கையில் காணாமற்போனவர் | 5,00,000 (குழு விபத்துக் காப்பீடு) |
| நிரந்தர முழு ஊனம் | 5,00,000 |
| இயற்கை மரணம் | 25,000 ஆக உயர்வு |
| கல்வி உதவித் தொகை | 10-ம் வகுப்பு முதல் முதுகலை மற்றும் தொழில் கல்வி வரை மாணவர்களுக்கு உதவித் தொகை. |
| மகப்பேறு உதவி | 6 மாதங்களுக்கு மாதம் ₹1,000 வீதம் ₹6,000. |
| திருமண உதவி | உறுப்பினர் மற்றும் மகன், மகளின் திருமணத்திற்கு உதவித் தொகை. |

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

**வாழ்வாதாரம் மற்றும் திறன் மேம்பாடு:**

கடற்பாசி வளர்ப்பு: மத்திய அரசின் பிரதமரின் மத்சய சம்பதா யோஜனா (PMMSY) திட்டத்தின் கீழ், புதுக்கோட்டை உட்பட மன்னார் வளைகுடா பகுதியைச் சேர்ந்த மீனவ மகளிருக்கு கடற்பாசி வளர்ப்பு (Seaweed Cultivation) மேற்கொள்ளத் தேவையான உபகரணங்கள் மற்றும் மானியங்கள் வழங்கப்படுகின்றன. மீன் பதப்படுத்துதல் மற்றும் கூண்டு வளர்ப்பு: மன்னார் வளைகுடா பகுதியில் மீனவர்களுக்கு ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்கவும், அதேசமயம் கூண்டு அமைத்து மீன் வளர்ப்பு, மீன் பதப்படுத்துதல் போன்ற துணைத் தொழில்களில் ஈடுபடவும் தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

**மீனவர்களின் உபகரணங்கள் ;**

பழங்கால மனிதல் வேட்டையாடுவதற்கு முதலில் கற்களைக்கருவியாகப் பயளிபடுத்தினால், மனித வாழ்வில் வளர்ச்சியில் ஒரு பொருமை உற்பத்திற்கும் உணவுப் பொருளை சேகறிப்பதற்கும் பலவகையான கருவிகள் உருவாக்கப்பட்டது மீன்பிடித்தல் தொழில் முறையும் வளர்ச்சியடைந்தது. அறிவியல் வளர்ச்சி காரனமாகத்தொழில் முறையில் புதிய மாற்றங்கள்புகுத்தப் பட்டம், பல புதிய கருவிகளும் பயபடுத்தப்பட்டன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

ஆயினும் மீன்பிடித் தொழிபயணிபடும் அடிப்படைக் கருவிகளாக இன்றுவரை கட்டுமரம் எந்தை, ஏவ்டில், வலைகள் என்ற நாக்குமே பயன்படுத்தப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. இதைத்தவிர மற்ற கருவிகளும் மீன்பிடிப்பதற்கு பயன்படுத்துகின்றனர் உபகரணங்கள் பெரியவத்தை, சிறியவத்தை, வசுவம் கட்டுமரம், விசைப்படகு, நங்கரம்,தவீடு. நாட்டு. ஏ கிரு, நீர்ப்பட்டை, பாய், போன்றவையாகும்.

**வலைகள் ;**

விடிவலை, இலப்புவலை ,மொரல்வலை, வீச்சுவலை, தவிருவலை (மடி), இறால்வலை (மடி) திருக்கை வலை, குடைவலை, கட்டாவலை . நண்டுவலை, அடிவலை, கெண்டை எலை. செங்கனிபலை, சீப்பிவலை, கலிங் கவலை. வெளிலாவலை, வெடிவலை,. சம்பாதவிடு வலை, குறுக்கிட்டு வலை, சுவாத் துண்டி முக்கிய மானவைகளாகும்.

**பரிந்துரைகள்:**

புதுக்கோட்டை மாவட்ட மீனவர்களின் நீடித்த சமூக-பொருளாதார மேம்பாட்டிற்காக, பின்வரும் கொள்கைத் திட்டங்களில் கவனம் செலுத்த வேண்டும்: பாரம்பரிய மீனவர் பாதுகாப்பு: நாட்டுப் படகு மீனவர்கள் பயன்பெறும் வகையில், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு உகந்த நவீன கருவிகள் (Sustainable Fishing Gear) மற்றும் சிறு படகுகள் வாங்குவதற்கான

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

மானியங்களை எளிமைப்படுத்தி, அவற்றை விரைவாகச் சென்றடைய வழிவகை செய்ய வேண்டும். சூழலியல் கட்டுப்பாடு: கடல்வளத்தைப் பாதுகாக்கும் வகையில், இழுவலைப் படகுகளுக்கான சட்டப்பூர்வ மற்றும் நேரக் கட்டுப்பாடுகளைக் கடுமையாக்குவதுடன், மீன்வள மேலாண்மைக்கான உள்ளூர் அமைப்புகளுக்கு அதிக அதிகாரமளிக்க வேண்டும். மாற்று வாழ்வாதாரம்: கடற்பாசி வளர்ப்பு, மீன் பதப்படுத்துதல் மற்றும் கூண்டு வளர்ப்பு போன்ற துணைத் தொழில்களில் ஈடுபட மீனவ மகளிர் மற்றும் இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளுடன் கூடிய நிதியுதவிகளை வழங்க வேண்டும். இந்த ஆய்வின் முடிவுகள், புதுக்கோட்டை மாவட்டத்தின் மீன்பிடித் தொழில் துறையில் நவீனத்துவம் மற்றும் பாரம்பரியம் ஆகிய இரண்டிற்கும் இடையே ஆரோக்கியமான மற்றும் நீடித்த சமநிலையை ஏற்படுத்தும் கொள்கைகளை வகுக்க உதவும் என்று இந்த ஆய்வு நம்புகிறது.

**முடிவுரை ;**

புதுக்கோட்டை மாவட்டத்தின் கடலோர மீனவச் சமூகத்தின் மீது மரபுசார் தொழில் முறைகள் மற்றும் நவீன இயந்திரமயமாக்கலின் (Mechanization) தாக்கங்களை ஒரு சமூக-பொருளாதாரப் பார்வையில் ஆழமாக ஆராய்ந்தது. சுமார் 42.8 கி.மீ நீளமுள்ள கிழக்குக் கடற்கரையை ஒட்டிய 32 கிராமங்களை ஆய்வுக் களமாகக் கொண்டு, மீனவர்களின்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

வாழ்வாதாரமான மீன்பிடித் தொழிலில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப மாற்றங்களையும், அதன் விளைவாக ஏற்பட்ட பொருளாதார அசைவுகளையும் ஒப்பிட்டுக் காண்பது ஆய்வின் பிரதான நோக்கமாக இருந்தது. ஆய்வின் மூலம் பெறப்பட்ட தரவுகள் மற்றும் கள ஆய்வின் வெளிப்பாடுகள் பின்வரும் முக்கிய உண்மைகளை நிறுவுகின்றன: பொருளாதார நிலை: இயந்திரப் படகுகள் மற்றும் இழுவலைகளைப் பயன்படுத்தும் நவீன மீனவர்கள், முதலீடு மற்றும் இயக்கச் செலவுகளில் அதிக ரிஸ்க் எடுத்தாலும், அவர்களுடைய நிகர லாபம் பாரம்பரிய நாட்டுப் படகு மீனவர்களை விடக் கணிசமாக அதிகமாக உள்ளது. இருப்பினும், பாரம்பரிய மீனவர்கள் குறைந்த முதலீட்டில் நிலையான லாப வரம்பையும், குறைந்த கடன் சுமையையும் கொண்டுள்ளனர். சூழலியல் தாக்கம்: மரபு சார்ந்த மீன்பிடி முறைகள் ஆழம் குறைந்த பகுதிகளில் இலக்கு மீன்களை மட்டுமே பிடிப்பதால், துணை மீன் பிடிப்பு (By-catch) குறைவாகவும், கடல் பல்லுயிரினங்களுக்கு அச்சுறுத்தல் இல்லாமலும் உள்ளன. ஆனால், நவீன இழுவலைகளின் பயன்பாடு கடல் சூழலுக்கும், இளம் மீன் வளத்திற்கும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்துகின்றது. அரசுத் திட்டங்கள்: அரசு வழங்கும் எரிபொருள் மானியம், மீன்பிடித் தடைக்கால நிவாரணம், சேமிப்புத் திட்டங்கள் மற்றும் நலவாரிய உதவிகள் ஆகியவை மீனவர்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்துகின்றன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

ஆனால், இந்த நலத்திட்டங்களை அணுகுவதிலும், குறிப்பாக நவீனமயமாக்கல் உபகரணங்களுக்கான மானியங்களைப் பெறுவதிலும் பாரம்பரிய மீனவர்கள் சவால்களை எதிர்கொள்வது தெளிவாகிறது. சங்க இலக்கியம் முதல் இன்று வரை நீடித்து வரும் மீன்பிடித் தொழிலின் முக்கியத்துவம் தொடர்ந்தாலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் பன்முகச் சமூகத்தினர் இத்தொழிலில் ஈடுபடுவது, மீன்பிடித் தொழில் மீதான சமூகப் பார்வையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதைக் குறிக்கிறது.

**துணை நூல் பட்டியல் :**

1. பரிமணம் ,பாலசுப்ரமணியன் .அகநானூறு: 'நச்சினார்க்கினியர் உரையுடன்', முதற்பதிப்பு, [நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் ], [2010].
2. பரிமணம் ,பாலசுப்ரமணியன் புறநானூறு: 'உ.வே.சா. உரையுடன்', [நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்], [2011].
3. பரிமணம் ,பாலசுப்ரமணியன் பெரும்பாணாற்றுப்படை: [நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்], [2010].

4. மோகன். இரா .மதுரைக் காஞ்சி: 'நச்சினார்க்கினியர் உரையுடன்', நல்நிலம் பதிப்பகம். 2012

5.சாமி, பி.எல். (1967). *சங்க இலக்கியத்தில் செடி கொடிகள்* . சென்னை: [காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ்].

6.சுப்பராயன், வே.*கடலும் மீனவரும்: தமிழகக் கடற்கரையின் சமூகப் பொருளாதாரம்*. மதுரை: காவ்யா பதிப்பகம். . (2018).

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

7.**ஜான்சன், டேவிட்**. (Johnson, David). (2020). *Impact of Mechanization on Coastal Livelihoods: A Study in Tamil Nadu*. New Delhi: Academic Press.

8.**மீனவன், கவிஞர்**. *பரதவர் - சமூகப் பார்வைகள்*. **நாகப்பட்டினம்: கலைமகள் பதிப்பகம்**. (2015).

9.**ரமேஷ், அ. மற்றும் செந்தில் குமார், க**. (Ramesh, A. & Senthil Kumar, G.). (2019). 'Fishing Practices and Environmental Degradation: A Comparative Analysis'. *Journal of Marine Studies*, Vol. 12, Issue 3, pp. 45-60.

10.தமிழ்நாடு அரசு. *மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை நிர்வாக அறிக்கை* (Administrative Report, Department of Fisheries and Fishermen Welfare, Government of Tamil Nadu). **சென்னை**: [2012].

11.இந்தியா அரசு. *பிரதமரின் மத்சய சம்பதா யோஜனா (PMMSY) திட்ட வழிகாட்டு நெறிமுறைகள்*. புது டெல்லி: மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகம்.

12.புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகம். *புதுக்கோட்டை மாவட்ட புள்ளியியல் கையேடு* (Pudukkottai District Statistical Handbook). [2011].

13.மக்கள்தொகை கணக்கெடுப்பு, 2011. *தமிழ்நாடு: கடற்கரை மாவட்டங்களின் மக்கள்தொகை மற்றும் தொழிலாளர் தரவுகள்*

14. முத்துராஜன்.ஆர். 'தொழில்நுட்ப மாற்றங்கள் மற்றும் கடன் சுமை: மீனவர் சமூகத்தில் ஒரு கள ஆய்வு'. *ஆய்வுக் களஞ்சியம் - தேசிய கருத்தரங்கக் கட்டுரை*, (2022).

15. ராமஜெயம் மா. *கடல்சார் உயிரியலும் பாதுகாப்பும்* மணிமொழி பதிப்பகம் (2017).